28942

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்த்துறை

# வளர்நிலையும் ஆக்கப்பணிகளும்



தோற்றம்
5—8—1905

மறைவு
12—5—1984

ஈடில்லர் எம் இணைவேந்தர்
அமரர் முத்தையவேள் அவர்களுக்கு

# அன்புக் காணிக்கை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்த்துறை

# வளர்நிலையும் ஆக்கப்பணிகளும்

ஆசிரியர்கள் ;

க. தியாகராசன்

அ. ஆனந்தநடராசன்

# முன்னுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வரலாறு எழுதுவது தமிழ் மொழியின் வளர்ச்சியும் வரலாறும் எழுதுவதற்கு ஒப்பானதாகும். தமிழ் காத்த பெரியார்கள் தலைமையேற்றிடத் தமிழ் வளர்த்த சான்றோர்கள் பணி யாற்றிட, வெள்ளிவிழாவும் பொன்விழாவும் கண்டது தமிழ்த் துறை ஆகும். தொன்மையான தமிழமொழி செல்வ மொழியாக விளங்கிடத் தமிழ்த்துறை புரிந்த தொண்டுகள தமிழ் மொழி வரலாற்றில் இடம் பெறுகின்றன என்பதனைப் புதுதில்லியில் அனைத்திந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 16-ஆம் கருத்தரங்கு நடைபெறும் இவ்வேளையில் (ஜூன் 1, 2, 3) அதனைச்சிறப்பித்து வெளியிடப்படும் இந்நூல் எடுத்துக்காட்டும்.

பல்கலைக்கழகம் கண்ட அறத்தந்தை அண்ணாமலை வள்ளல் தம் அடிப்படைக் குறிக்கோளாகத் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்க்க எண்ணினார்கள். அக்குறிக்கோளிற் கேற்ப அவர்கள் நெடுங்காலம் ஈடில்லா இணை வேந்தராக இருந்து தமிழ்த்துறை வளர்ச்சியைப் பெரிதும் பேணினார்கள். அவர் வகுத்த செந்நெறியில் ஒழுகிய பல்கலைக்கழக இணை வேந்தர் முத்தையவேள் அவர்கள் அண்மையில் அமரராகிவிட் டாலும் என்றும் தமிழ்போல் வாழ்வார் எனத்தமிழ்த்துறையின் சார்பாக அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம். இத்தமிழ்க் கையேடு உரியகாலத்தில் உலாவர உதவிய நிர்வாகச்சிறப்பு, சிந்தனை ஊற்று, நாடு போற்றும் நாவரசர் நம் துணை வேந்தர் பேராசிரியர் திரு சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கு த் தமிழ்த்துறையின் சார்பாக நெஞ்சத்தில் பூக்கும் நன்றி மலர் களைப் பணிவன்புடன் அளிக்கிறோம்.

எதிர்காலத்தில் ஒரு பெருநூலாக வருவதற்கு அடிப்படையான இந்நன்னூலுக்குரிய கருத்துக்களையும் செய்திகளையும் விரைந்து தொகுத்து அளித்த ஆசிரியர்கள் திரு க. தியாகராசன், திரு அ. ஆனந்தநடராசன் ஆகியோர் களுக்கும் துறையின் சார்பாகப்பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைநகர்
31—5—1984

டாக்டர். ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத்தலைவர்

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# தமிழ்த்துறை

# வளர்நிலையும் ஆக்கப்பணிகளும்

தஞ்சைக்குப் பெருமையளிப்பது பெருவுடையார் ஆலயம். திருநெல்வேலிக்குப் பெருமையளிப்பது குற்றால நீர்வீழ்ச்சி. செங்கல்பட்டுக்குப் பெருமையளிப்பது மாமல்லபுரம் சிற்பக்கலை. திருவண்ணாமலைக்குப் பெருமையளிப்பது அண்ணாமலைதீபம். தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். தில்லையில் அமைந்த கூத்தன் திருக்கோயிலைப் போல அதன் எல்லையில் அமைந்துள்ளது ஒப்பற்ற கலைக் கோயில் பல்கலைக் கழகம். அறத் தந்தை அண்ணாமலை வள்ளலின் அருட்பெருங் கொடையில் உருவாகிக் கடந்த 55 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு வரலாற்றோடு இரண்டறக் கலந்து வளர்ந்து வருகின்றது. உலக மொழிகளில் மூத்த மொழியான தமிழ் மொழியைப் பேணிக் காத்து வளர்த்து வரும் பல்கலைக் கழகத் தமிழ்ப் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கது.

## அறத்தந்தையின் குறிக்கோள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆளவை மன்றத்தின் (1929) தொடக்க விழாவில் அறத்தந்தை அண்ணா மலை வள்ளல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

, "தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த குறிக்கோளாக இருக்கும்

மேடை அலங்காரத்திற்காகவோ, கைத்தட்டலுக்காகவோ அப்பெரியார் இக் கருத்துக்களைக் கூறவில்லை. சங்கங்கள்,

பண்டைக்காலத்தில் தமிழ் வளர்த்ததுபோல, இந்நூற்றாண்டில் தமிழ் வளர்க்கும் தமிழ்ச் சங்கமெனப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. ஒரு மொழியின் இலக்கிய இலக்கணங்களைப் புலவர் படைப்பர்; புரவலர் காப்பர்; கழகம் வளர்க்கும். இம் முச் செயல்களும் அண்ணாமலைப் பல்கலைககழகத்தில் நிரம்ப இருந்த காரணத்தால்தான் இங்குச் செந்தமிழ் செம்மைப்புடன் வளர்ந்திருக்கின்றது. சிந்தனைச் செழுமையைப் படைக்கும் புலவர்களும், அப்புலவர்களைக் காத்திடும் புரவலராக அண்ணாமலை வள்ளலும் அப்பெருமகனார் புதல்வர் இணையில்லா இணைவேந்தர் டாக்டர் ராஜா சர் முத்தையாவேளும், அறிவுத் தொண்டாற்றிடும் கழகமாக அணணாமலைப் பல்கலைக்கழகமும் இருந்துலரும் காரணத்தால் தமிழுக்கு ஒரு தனிவளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

## அண்ணாமலை ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம்

1970இல் நாட்டார் பேரவை வெள்ளிவிழா மலரில் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், பல்கலைக்கழகத்தின் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடும் காலத்து,

"தமிழின் பழைய நூற்றுறைகளையும், தமிழரின் பழைய நாகரிகச் செய்திகளையும், கலைகளையும் ஆராய்ந்து வெளிப்படுத்தியும், தமிழ் மக்கள் கைததொழில் முதலியவற்றில் மேன்மையுறுதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தியும், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், ஆக்கம் விளைவித்தலையே முதல் நோக்கமாகக் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப் பெற வேண்டுமென்னும் முயற்சி 1925-ஆம் ஆண்டு முதல் 1927-ஆம் ஆண்டு முடிய நடைபெற்றதனைப் பலர் அறிதல் கூடும். அதன் சார்பாக நடைபெற்ற முதற் பெருங்கூட்டம் 23—8—1925இல் இச்சங்கக் கட்டிடத்திலேயே நிகழ்ந்தது. பின்பு நிகழ்ந்தவற்றை இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. அம் முயற்சியைச் சென்னை அரசாங்கத்தினரே ஏற்றுக்கொண்டு, அதனை ஆராய்ந்து துணிதற்கு ஓர் குழுவினை நியமித்தனர். அதற்கு அமைச்சராக இருந்தவர், இப்பொழுது சென்னை மாகாண அரசியலில் அமைச்சராகவிருக்கும் கனம் பி.டி.இராசன்

அவர்களே. அக்குழுவினர் தமிழ்நாட்டின் பல பகுதியிலுள்ள, அறிஞர் பலரோடும் உசாவி, முடிவில், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவது இன்றியமையாததே எனவும், அதற்கேற்ற இடம் திருச்சிராப்பள்ளியே எனவும், தம் துணிபு உரைத்தனர். அவ்வளவில் அது நின்றுவிட்டது. அம்முயற்சி அறவே கைவிடப் பட்டதற்குக் காரணம் என்ன? தனவணிகர் கோமானாகிய செட்டிநாட்டரசர் கனம் அண்ணாமலை அவர்கள், வரையா வள்ளன்மையுடன், பெரும் பொருள் வழங்கி, அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தமையே ஆகும். இது முற்கூறிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கங் கொண்டு தோற்றுவிக்கப்பெற்றதாகலின், தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் மக்களின் ஆக்கத்திற்கும். இஃதே அமையுமென்னும் கருத்தால், முன்னெழுந்த முயற்சியைக் கைவிட நேர்ந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அது தோன்றிய நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றதெனவே எண்ணுகிறேன். எனி னும் தமிழ் மக்களாயினார் இச்செய்திகளை அடிக்கடி நினை வுக்குக் கொண்டு வருதல் கடனாகும்.''

என இது ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாக விளங்குதலை எடுத்துக்காட்டுகின்றார்.

## பணிபுரிந்த தமிழ்த்துறைத் தலைவர்கள்:

சங்கப் புலவர் பிசிராந்தையார், தம்முடைய தலை நரைக்காமல் இருப்பதற்குரிய காரணங்களில் ஒன்றாகச் சான் றோர்கள் வாழும் ஊர் தம்மூர் என்ற காரணத்தைக் கூறுகின் றார். உலக அரங்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, வரலாற்றுச் சிறப்படைவதற்குரிய காரணம் செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும் இங்குப் பணிபுரிந்ததாலே யாகும். இந்நூற்றாண்டில் தமிழ்ப் பெரும் புலவர்களில் பலரும் தமிழ்த் துறையில் பேராசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் பணிபுரிந்திருக்கின்றனர். தமிழ்த் துறையில் சட்டப் பேரறிஞர் பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, தமிழ்ப் பேராசிரியராக விளங்கத் தமிழ்த்துறையின் வரலாறு பீடுடன் தொடங்குகிறது.

## தமிழ்த்துறையின் வளர்நிலைக்கு அடித்தளமிட்ட தலைவர்கள் விவரம்:

### தமிழ்த்துறைத் தலைவர்கள் :

1. திரு கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம். ஏ., எம். எல். (1929)
2. திரு ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். (1930)
3. திரு சுவாமி விபுலானந்தா, பி. எஸ்ஸி. (லண்டன்) (1931)
4. திரு ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல். (1933)
5. திரு பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் (1938)
6. திரு கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம். ஏ., எம். எல். இரண்டாம் முறை (1940)
7. திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரம், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல் (1944)
8. டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம். ஏ., பி எச். டி. (1946)
9. திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், பண்டித வித்வான் (1953)
10. திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரம், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல். இரண்டாம் முறை (1958)
11. திரு கோ. சுப்பிரமணியப் பிள்ளை, எம். ஏ., பி. எல். (1963)
12. டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி., (1970)
13. திரு க. வெள்ளைவாரணன், வித்துவான் (1977)
14. டாக்டர் நா. பாலுசாமி, எம். ஏ., பி. எல்., எம். லிட்., பிஎச்.டி (1981)
15. டாக்டர் ஆறு. அழகப்பன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி. (1984)

## தமிழ்த்துறையில் பணியாற்றிய சான்றோர்கள்:—

சிறந்த கல்வியறிவும் ஆராய்ச்சித்திறனும் மிக்க சான்றோர்கள் பலரையும் பெற்று, தேர்ந்த மாணாக்கர்களையும், ஆராய்ச்சி அறிஞர்களையும் உருவாக்குகின்ற விளைநிலமாகத் தமிழ்த்துறை திகழ்கின்றது. தமிழுலகம் பாராட்டும் வகையில் தம் மதிநுட்பத்தாலும் பாடங்கற்பிக்கும் திறத்தாலும் ஆராய்ச்சி நூல்களைப் படைக்கும் ஆற்றலாலும் புகழ்பெற்று விளங்கிய சான்றோர்கள் பலரைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது இத்துறை. இவர்கள், தாம் எடுத்துக்கொண்ட துறைதோறும் ஆழ்ந்தகன்ற மதிநுட்பத்தால் தன்னிகரற்றுத் திகழ்ந்த அறிஞர்கள் ஆவர். அச்சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கோர்:

1. திரு. பொன்னோதுவார் மூர்த்திகள்
2. திரு. சர்க்கரை இராமசாமி பிள்ளை
3. திரு. கந்தசாமியார்
4. திரு. மகாவித்துவான் ரா. இராகவையங்கார்
5. திரு. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
6. டாக்டர். ரா. பி. சேதுப் பிள்ளை
7. திரு. ஆ. பூவராகம் பிள்ளை
8. திரு. தி. பொ. பழனியப்ப பிள்ளை
9. திரு. இரா. ப. அமிர்தலிங்கம் பிள்ளை
10. சித்தாந்த கலாநிதி<br>திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை
11. கல்வெட்டறிஞர்<br>திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்
12. திரு. ஞா. தேவநேயப் பாவாணர்
13. திரு. மு. அருணாசலம் பிள்ளை
14. திரு. மீ. முத்துசாமி பிள்ளை
15. திரு. வை. சுந்தரேச வாண்டையார்

16. திரு. பு. ரா. புருடோத்தம நாயுடு
17. திரு. ந. சிவப்பிரகாச தேசிகர்
18. திரு. இ. எஸ். வரதராச ஐயர்
19. திரு. இராவ் சாகிப். கு. கோதண்டபாணி பிள்ளை
20. திரு. வீ. உலக ஊழியர்
21. திரு. வி. மு. சோமசுந்தரம் பிள்ளை
22. திரு. தி. இ. இராமானுச ஐயங்கார்
23, திரு. கே. என். சிந்தாமணி
24. டாக்டர். மெ. சுந்தரம
25. டாக்டர். செல்வி. எல். ஆர். ஜான் அம்மையார்
26. மகாவித்துவான். திரு ச. தண்டபாணி தேசிகர்
27. திரு. அ. நடேச முதலியார்
28, மகாவித்துவான். திரு. அருணைவடிவேல் முதலியார்
29. திரு. செ. வேங்கடராமச் செட்டியார்
30. திரு. கா. ம. வேங்கடராமையா
31. திரு. ப. அருணாசலம்
32. திரு. மு. அண்ணாமலை
33. டாக்டர். சோ. ந. கந்தசாமி
34. டாக்டர். க. மீனாட்சிசுந்தரம்
35. டாக்டர். உளுந்தூர்பேட்டை சண்முகம்
36. டாக்டர். கு. தாமோதரன்
37. திரு. சுப. இராமநாதன்
38. டாக்டர். E. அண்ணாமலை
39. டாக்டர். சுப. திண்ணப்பன்
40. டாக்டர். கொ, இலக்குமணசாமி
41. டாக்டர். ந. வீ. ஜெயராமன்

1929-ல் பல்கலைக் கழகம தோன்றுவதற்கு முன்பு மீனாட்சிக் கல்லூரியாக 1920-ல இப்பல்கலைக் கழகத்தின்

தொடக்க உரு இருந்தபொழுது 'தமிழ் தாத்தா' என்று போற்றப்படும் டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் தமிழ்க்கல்லூரி முதல்வராக இருந்து பெருமை சேர்த்துள்ளார்.

'தமிழிசைக் காவலர் முத்தையவேள்' கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராகத் தம் சொந்த ஊரிலிருந்தே பணியாற்றப் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட வரலாற்றினைத் தமிழுலகம் நன்கறியும்.

## தமிழுக்கெனத் தனிச் சிறப்புகள் :

ஆங்கில மோகம் கொடி கட்டிப் பறந்த வேளையில், சீரிளமைத் தமிழுக்குச் செட்டி நாட்டரசர் ஏற்றிய தமிழ்க் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது. தமிழுக்கென்று தனித்துறை கண்ட அண்ணாமலைப பல்கலைக் கழகம், தமிழுக்கென்று கலைப்பிரிவு, கீழ்த்திசைப் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளை அமைத்து மூன்று துறைகளுக்கும், தனித்தனிப் பேராசிரியர்களை நியமித்த சிறப்புடையது. பிற துறை ஆசிரியர்களைப் போலத் தமிழாசிரியர்களுக்கும் ஒத்த ஊதியத்தை முதன்முதலாக வழங்கிய பெருமையுடையது. பேராசிரியர் அ. சிதம்பரநாதனாருக்கு டாக்டர் பட்டம் ஆராய்ச்சிக்காக முதன்முதல் கொடுத்ததும், நெடுங்காலம் நிலையான தமிழ்த் தொண்டு ஆற்றியதற்காக நாவலர் சோமசுந்தர பாரதியார்க்கு பல்கலைக்கழக வெள்ளி விழாவில் டாக்டர் பட்டம் அளித்ததும ஆகிய சிறப்புகளைக் கொண்டது. மேலும், பல்கலைக் கழக பொன்விழாவில் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாருக்கும், செம்மல் டாக்டர் வ. சுப. மாணிக்கனாருக்கும் டாக்டர் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது.

தமிழ்த்துறையில் பணிபுரியவில்லை எனினும் தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டு செய்த பெருமக்களாகிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி., முன்னாள் தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயில், காலஞ்சென்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மகாராஜன் ஆகியோருக்கும் பொன்விழாவில் கௌரவ டாக்டர் பட்டமளித்துப் பெருமைப்படுத்தியது.

## தமிழில் சிறப்புக்கல்வி :

தமிழில் பி.ஏ.(ஆனர்சு), புலவர், ஆசிரியப் பயிற்சி போன்ற வகுப்புகளை முதல்முதலாக ஏற்படுத்தியது இப்பல்கலைக்கழகம் தான். மேலும் இப்பல்கலைக்கழகம்தான் தமிழுக்கென்று தனியே பல பட்டப் படிப்புக்களைக்கொண்டு விளங்குகிறது. தமிழ் எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி. முதலிய பட்ட படிப்புக்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் இருப்பினும் இப்பல்கலைக் கழகத்தை மாணவர்கள் பெரிதும் விரும்பிவந்து பயின்று சிறக்கின்றனர். பட்ட மேற்படிப்பில் எம்.ஓ.எல். வகுப்பு இப்பல்கலைக் கழகத்தில் மட்டுமே உள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## ஆய்வுப் பட்டங்கள் :

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இதுவரை 18 டாக்டர் பட்டங்களும் (பிஎச். டி.) 34 எம். லிட். பட்டங்களும், 39 எம். பில். பட்டங்களும், ஆராய்ச்சி செய்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிகளுள் பல, பலருக்கும் பயன்படும் வகையில் பல்கலைக் கழகப் பதிப்புக் களாக மானியக்குழு நிதி உதவியுடன் வெளிவந்துள்ளன.

பிஎச். டி., எம்.லிட்., எம். பில்., பட்டம் பெற்றோர் தம் பெயர்களும் அவர்தம் ஆய்வுத் தலைப்புக்களும் பின்வருமாறு :

### டாக்டர் பட்டம் பெற்றவர்கள்

ஆய்வாளர் பெயர் — ஆய்வுத்தலைப்பு

1. Chidambaranathan Chettiar (A) 1942.
   — Studies in Tamil Prosodical Theories.
2. V. Ponniah – 1947
   — Epistemology of the Saiva Siddhanta System.
3. T. E. Gnanamurthy – 1962
   — Critical Study of Civaka Chintamani.
4. S. Vijaya Bharathi – 1968
   — Critical Study of Bharati's Works.

5. P. Arunachalam - 1969
— History of Tamil Syntax (The Period of Tholkappiyam and Sangam)

6. M. Govindaswamy - 1969
— Survey of the Sources for the History of the Tamil Literature

7. S. N. Kandaswamy - 1971
— Buddhism as expounded in Manimekalai.

8. P. Soundra - 1973
— Study of St. Thirugnanasambandar

9. G. Damodaran - 1973
— Literary Value of Thiruvoimoli

10. நா. வீ. செயராமன் - 1976
— சிலப்பதிகார யாப்பமைதி

11. கொ. இலட்சுமணசாமி - 1976
— சிலப்பதிகாரம் மணிமேகலை - காப்பியமரபு

12. ஆறு. அழகப்பன் - 1977
— தமிழ் நாடக பரிணாம வளர்ச்சி

13. அ. சு. சண்முகம் - 1978
— தமிழ்ப்புதினங்களின் தோற்றம்

14. P. K. George - 1979
Comparative Study of the Sangam Literature of Tamil and the Golden Age Literature of Latin

15. சி. கதிர்வேல் - 1983
— சேலம் மாவட்டச் சிறுதெய்வங்கள்

16. கு. இராசேந்திரன் - 1983
— கம்பராமாயணத்தில் அணிநலம்

17. வெ. பழநியப்பன் - 1984
— தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள் - ஓர் ஆய்வு - (சங்க இலக்கியம் - சிறப்பாய்வு)

18. பழ. முத்துவீரப்பன் - 1984
— தி. ஜானகிராமன் சிறுகதைகள் - ஒரு திறனாய்வு

## எம். லிட். பட்டம் பெற்றவர்கள்

1. N. K. Srinivasan - 1933
— History of Tamil Literature

2. S. Arunachalam - 1948
— Study of Tamil Dramas of the 19th Century

3. V. Sadasivam - 1948
— Tamil Poetry in the 19th Century

4. Mrs. Ratna Navarathnam - 1949
— A New Approach to Thiruvasagam

5. X. S. Thanianayagam
— Interpretation of Nature in ancient Tamil poerty

6. Mrs. R. Ganesalingam - 1954
— Development of the ideal of Karpu as reflected in Tamil Literature upto the Tenth Century A.D.

7. M. Shanmugam - 1955
— Studies in Chilappathikaram

8. M. Elayaperumal - 1957
— Poetical works of Kavimani Desigavinayagam Pillai

9. M. Soundra - 1957
— Studies in Kalladam

10. M. Govindaswamy - 1958
— Tamil Literature in the Sangam Age

11. K. Meenakshisundaram - 1959
— Study of the poetical works of Subramanya Bharathi

12. P. Arunachalam - 1961
— Maraimalai Adigal - A Critical evaluation of his contribution to Tamil Culture

13. S. Bhagirathi - 1961
— Language of the Tamil Inscription (1050 - 1250)

14. R. Natarajan - 1961
— Manimekalai as an epic. (2 Vol)

15. V. Ramakrishnan - 1961
— Science in ancient Tamil Literature

16. A. Jebarathnam - 1962
— Study of the Tamil Country and her people as depicted in Silapathikaram.

17. N. Kumaraswami Rajah - 1962
— Philological Study of Kurunthogai.

18. R. Pichaikannu - 1962
— Kumaraguruparar's Contribution to Tamil Literature.

19. A. Ramaswami pillai - 1962
— Tirikutaracappa-k-kavirayar

20. S. Thanajayarasasingam - 1962
— Some Tamil documents of the Dutch period in Ceylon, the language of the Tamil Dutch documents of XVIII Century.

21. K. D. Thirunavukkarasu - 1962
— Treatment of ethics in ancient Tamil Literature.

22. G. Damodaran - 1963
— Critical exposition of Acharya Hirudayam.

23. N. Rajalakshmi - 1963
— History of Tamil Grammar with reference to declension.

24. E. Annamalai - 1964
— Development of Wars and their places in Tamil Literature.

25. T. S. Manickam - 1964
— Loan words in Tamil-exeept Sanskrit.

26. S. Vaithilingam - 1964
— Fine arts and crafts in Pattu-p-pattu and Ettu-t-tokai.

27. Sp. Thinnappan - 1965
— Language of Palamoli (2 Vol.)

28. AR. Alagappan - 1966
— Critical study of the folk songs in Tamil in Tamil Nadu.

29. M. Annamalai -
— Vaishnavism of the Early Alwars

30. N. V. Jayaraman - 1967
— Pallu and Nonti Natakam

31. S. Shanmugam - 1969
— Nattrinai - a literary study

32. V. S. Alagappan - 1973
— Social and Political life as revealed in Purananuru

33. V. Palaniappan - 1974
— Pukalenti and his work - Nalavenba

34 Sp. Ramanathan -
— Parani literature in Tamil

## எம். பில். பட்ட ஆய்வேடுகள்

| ஆய்வாளர் பெயர் | | ஆய்வுத் தலைப்பு |
|---|---|---|
| 1. செ. சந்திரசேகரன் | — | அரிச்சந்திரபுராணம் |
| 2. கோ. தெய்வநாயகம் | — | கரந்தைச் செப்பேடுகள் - ஓர் ஆய்வு |
| 3. ம. மதியழகன் | — | இரட்டையர் - ஓர் ஆய்வு. |
| 4. சி. நம்மாழ்வார் | — | திருமங்கை ஆழ்வார் வாழ்க்கை வரலாறும் அருள்மொழிகளும் |

| | | | |
|---|---|---|---|
| 5. | துரை. பட்டாபிராமன் | — | புறப்பொருள் வெண்பா மாலை - ஓர் ஆய்வு |
| 6. | தி. பொற்கொடி | — | மணக்குடவர் |
| 7. | ஏ. எல். விசயலட்சுமி | — | பெரியாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு |
| 8. | வி. ஜோதி | — | ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு - ஓர் ஆய்வு |
| 9. | தி. சரோஜினி | — | மணியன் புதினங்களில் பெண் பாத்திரங்கள் |
| 10. | த. இராசவன்னியன் | — | நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தொல்காப்பிய உரைத்திறன் |
| 11. | ந. சுப்பிரமணியன் | — | பாவேந்தரின் இரு காப்பியங்கள் (கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா) - ஓர் ஆய்வு |
| 12. | சி. அங்கயற்கண்ணி | — | பாரதியார் |
| 13. | பச. ஏசுதாசன் | — | இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்துவக் கோட்பாடுகள் |
| 14. | துரை. லோகநாதன் | — | திருக்குறள் காளிங்கர் உரை - ஓர் ஆய்வு |
| 15. | சு. நாகம்மாள் | — | திருக்குறள் பிற்கால உரைகள் - ஓர் ஆய்வு |
| 16. | தா. மணி | — | யசோதர காவியம் - ஓர் ஆய்வு |
| 17. | மு. பொன்னாட்சி | — | பொன்னியின் செல்வனில் பெண் பாத்திரங்கள் |
| 18. | கோ. ஜெயமணி | — | சிலப்பதிகாரத்தில் - ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரைத்திறன் |

19. வி. உண்ணாமலை — முடியரசனின் பூங்கொடி - ஓர் ஆய்வு

20. வெ. அரங்கராசன் — சுந்தரர் தேவாரம் - கலை, இலக்கியப் பார்வை.

21. எச். முகம்மது நத்தர் சாகிப் மரைக்கார் — காஞ்சாகிபு சண்டை - ஓர் ஆய்வு

22. கே. வசந்தகுமாரி — தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்

23. ச. மீனா — தஞ்சை மாவட்டங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் - ஒரு திறனாய்வு

24. சா. உதயசூரியன் — நாமக்கல் கவிஞர் 'அவளும் அவனும்' - ஓர் ஆய்வு

25. ந. செயபாலன் — பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்

26. ஆ. மணி — பாரதியார் கவிதைகளில் ஒருமைப்பாடு

27. ப. கிருஷ்ணமூர்த்தி — சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் ஆகியவற்றில் பூம்புகாரும் மதுரையும்

28. பழ. பொன்னழகப்பன் — நைடதத்தில் காப்பிய அமைப்புகள் - ஓர் ஆய்வு

29. செ. வான்மதி — கவிமணி கவிதைகளில் குழந்தையுள்ளம்

30. தா. செல்வராசன் — ஐம்பதுகளில் ஜெயகாந்தன் சிறுகதைகள் - ஒரு திறனாய்வு

31. வை. ஞானசேகரன் — வ. உ. சிதம்பரனாதரின் தமிழ்ப்பணி

32. சி. சீதளா — வில்லிபுத்தூரார் பாரதமும் பாஞ்சாலி சபதமும் - ஓர் ஒப்பீடு

| | | | |
|---|---|---|---|
| 33. | சு. நடராசன் | – | நைடத அணிநலம் – ஓர் ஆய்வு |
| 34. | கே. வல்லரசி | — | கவிஞர் கண்ணதாசன் ஐங்குறுங் காப்பியங்கள் ஒரு திறனாய்வு |
| 35. | தி. பொன்னம்பலம் | -- | திரு ஞானசம்பந்தர் தேவாரத்தில் இயற்கை |
| 36. | சி. குறிஞ்சிச்செல்வன் | — | நற்றிணை காட்டும் இல்வாழ்க்கை |
| 37. | பா. எட்வர்டு தனராஜ் | — | கவிஞர்கள் மேத்தா, மீரா – ஓர் ஒப்புநோக்கு |
| 38. | என். சுபாஷிணி | — | சேரமான் பெருமாள் நாயனாரின் இலக்கியங்கள் – ஓர் ஆய்வு |

## தமிழ்த்துறைக் கருத்தரங்குகள்

### ஆசிரியர் கருத்தரங்கு :

1970-இல் தமிழ்க் கலைத்துறை, தமிழ்க் கீழைக் கலைத் துறை, தமிழ் ஆராய்ச்சித் துறை ஆகிய இம்மூன்று துறைகளும் ஒன்றாக இணைக்கப் பெற்று ஒரு தலைமையின் கீழ் இயங்கத் துவங்கியது. இந்திய மொழிப்புலத்தின் முதன்மையராகவும் ஒருங்கிணைந்த தமிழ்த் துறையின் தலைவராகவும் செம்மல் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் பொறுப் பேற்றார். ஆசிரியர் மாணவரிடையே பாடங் கற்பித்தல் பாடங் கேட்டல் ஆகிய இந்த அளவோடு கல்விப்பணி நின்று விடாமல், இரு சாராரிடையேயும் சிந்தித்தலாகிய ஆராய்ச்சிப் போக்கும் வளரவேண்டும் என்று கருதி. 1970 முதல் 1977 வரை ஆண்டுக்கு இரண்டு கருத்தரங்குகளாக 14 கருத்தரங்கு களை நடத்தியுள்ளார். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி பணிக்காலங்களில் மேலும் 4 கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. எனவே, நடை

பெற்ற 18 கருத்தரங்குகளின் வழியாகப் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை 300 ஆகும். இக்கட்டுரைகளில் பெரும்பான்மையானவை அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. அவை;

1. இலக்கியச் சிந்தனைகள்
2. இலக்கணச் சிந்தனைகள்
3. சிலப்பதிகாரச் சிந்தனைகள்
4. மணிமேகலைச் சிந்தனைகள்
5. தொல்காப்பியச் சிந்தனைகள்
6. திருக்குறள் சிந்தனைகள்

இவ்வாறு நூல்களில் வெளிவந்துள்ள கட்டுரைகள் நீங்கலாக இன்னும் சுமார் 135 கட்டுரைகள் நூல்களாக வெளியிடப்பட இருக்கின்றன. திட்பமும் செறிவும் உடைய இந்நூல்களில் காணும் ஆராய்ச்சிக் கருத்துக்கள், தமிழகத்திலும் பிற நாடுகளிலும் வாழ்கின்ற தமிழ் அறிஞர்கள் தம நூல்களிலும் ஆய்வேடுகளிலும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் வந்து இக்கருத்தரங்குகளில் கலந்துரையாடிச் சிறப்பித்தமை மகிழ்ச்சிக்குரியது.

## ஆய்வுச்சோலை

பிஎச். டி., எம். பில். ஆராய்ச்சி மாணவர்கள் " ஆய்வுச் சோலை " என்னும் பெயரில் வாரந்தோறும் கருத்தரங்கு நடத்தி வருகின்றனர். ஒரு மாணவர் தம் ஆராய்ச்சி தலைப்பினின்றும் ஒரு கூறினை விரித்துத் தம் ஆய்வுக் கட்டுரையாகப் படிப்பர். ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு அக்கட்டுரையில் உள்ள நிறைகுறைகளை எடுத்துக்கூறி, அக் கட்டுரை செம்மையுற வழிவகுப்பர். அனைத்து மாணவர்களும் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு கட்டுரைகள் படிப்பது அவர்தம் இன்றியமையாக் கடமையாகும்.

## 3. மாணவர் கருத்தரங்கு:—

ஆய்வுச்சோலையைப் போன்று எம். ஏ. எம். ஒ. எல். மாணவர்களும் வாரந்தோறும் மாணவர் கருத்தரங்கென ஓர் அமைப்பை ஏற்படுத்தித்தமக்குரிய பாடப்பகுதியினின்றும் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கட்டுரை படிப்பர். கலந்துரையாடலும் நிகழும். இது, தேர்வுக் கண்ணோட்டத்தில் அவர்களுக்கு மிகுதியும் பயன்நல்குவதாம். எழுத்தாற்றலையும், சொல்லாற்றலையும், சிந்தனைப் பெருக்கத்தையும் கல்வி பயிலும் காலத்திலேயே வளர்ப்பது இதன் . நோக்கமாகும்.

## 4. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் மூன்றாவது கருத்தரங்கு:—

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் மூன்றாவது கருத்தரங்க மாநாடு 1971 சூன் 12, 13 நாட்களில் அண்ணாமலைநகரில் நடைபெற்றது. டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களும், டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் செயலர்களாக இருந்து இக்கருத்தரங்கு மிகச் சீரிய முறையில் நடைபெற உதவினர். இக்கருத்தரங்கில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், பண்பாடு, கலை, மொழியியல் தொடர்பான 82 கட்டுரைகள் படிக்கப்பெற்றன.

முன்னைய இரு கருத்தரங்குகளில் அளிக்கப் பெற்ற கட்டுரைகள் தட்டுப்பதிவு செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. இக்கருத்தரங்கக் கட்டுரைகளே முதன் முறையாக «ஆய்வுக்கோவை» என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.

## 5. படைப்பிலக்கிய கருத்தரங்கு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சார்பில் படைப்பிலக்கியக் கருத்தரங்கம் 1983–அக்டோபர் 9 ஞாயிற்றுக் கிழமை பல்கலைக்கழக ஆளவை மன்றத்தில் மிகச் சிறப்பாக

நடைபெற்றது. காலையிலும் மாலையிலும் நடைபெற்ற இக்கருத்தரங்கில் புதினம், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை ஆகிய படைப்பிலக்கியங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. படைப்பிலக்கியக்கர்த்தா ஒருவரின் முன்னிலையில் அவர்தம் படைப்பிலக்கியங்களை ஒருவர் திறனாய்வு செய்வதும் அத்திறனாய்வுக்கு அவ்விலக்கியப் படைப்பாளர் பதில் உரை தருவதுமாக இந்நிகழ்ச்சிகள் அமைக்கப்பெற்றன.

கவிஞர் மேத்தாவின் புதுக்கவிதைகளைப் பூம்புகார் ஆசிரியர் ஆ. செகந்நாதன் அவர்களும், எழுத்தாளர் சு. சமுத்திரத்தின் சிறுகதைகளை ஆசிரியர் பழ. முத்துவீரப்பன் அவர்களும் டாக்டர் ஆறு. அழகப்பனின் நாடகங்களை டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்களும், நாவலாசிரியை சிவசங்கரியின் புதினங்களை ஆராய்ச்சியாளர் ம. மதியழகன் அவர்களும் திறனாய்வு செய்தனர்.

## திருக்குறள் ஆராய்ச்சித்துறை: —

இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோது சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய தமிழகப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றினுக்கும் ரூபாய் 3 இலட்சம் வைப்புநிதியாக அளித்து உலகப் பெருநூல் திருக்குறளுக்கு ஆராய்ச்சிகள் பெருக பேரறிஞர் அண்ணாவின் தமிழக அரசு வழிவகுத்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமைந்த திருக்குறள் ஆராய்ச்சித்துறை தமிழுலகிற்குத் தேர்ந்த நூல்கள் பலவற்றை வழங்கி வருவதுடன் ஆராய்ச்சிப்போக்கில் ஒரு தனித்தன்மையினையும் கொண்டு விளங்குகிறது.

திருக்குறள் நிதிய வெளியீடுகளாக இதுவரை வெளிவந்த நூல்கள், அச்சில் இருப்பவை, கையெழுத்துப் பிரதிகள், இப்பொழுது நடைபெறும் பணிகள் ஆகியவை பற்றிய விவரம் ஈண்டுப் பட்டியலாகத் தரப்பட்டுள்ளது.

## திருக்குறள் நிதிய வெளியீடுகள் :—

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 1. காப்பியங்களில் திருக்குறள் | – திரு ச. தண்டபாணி தேசிகர் |
| 2. திருக்குறள் பொருளகராதி | – டாக்டர் மு. கோவிந்தசாமி |
| 3. திருக்குறளும் பிற உரை ஆசிரியர்களும் | – டாக்டர் மு. கோவிந்தசாமி |
| 4. வள்ளுவரும் கம்பரும் | – திரு ச. தண்டபாணி தேசிகர் |
| 5. பரிமேலழகர் | – டாக்டர் மு. கோவிந்தசாமி |
| 6. வள்ளுவத்தில் மெய்ப் பொருட்சுவடுகள் | – திரு ச. தண்டபாணி தேசிகர் |
| 7. திருக்குறளும் தமிழ் பாரத நூல்களும் | – திரு. ந. இராமலிங்கம் |

### அச்சில்

| | |
|---|---|
| 8. பரிப்பெருமாள் உரை | திரு கா. ம. வேங்கடராமையா |
| 9. திருக்குறள் இயல்–8 | திரு க. அருணைவடிவேல் முதலியார் |

### கையெழுத்துப் பிரதிகள்

10. "தெய்வப் பனுவல்களில் திருக்குறள்"
(ஒன்பதாம் திருமுறையில் திருக்குறள்)

11. "தெய்வப் பனுவல்களில் திருக்குறள்"
(பத்தாந்திருமுறையில் திருக்குறள்)

12. "தெய்ப்பனுவல்களில் திருக்குறள்"
(பதினொன்றாந் திருமுறையில் திருக்குறள்) திரு க. அருணைவடிவேல் முதலியார்

13. திருக்குறளும் புறநானூறும் திரு கொ. இலக்குமணசாமி

14. "பெரியபுராண வரலாறுகளும் முதுமொழி வெண்பாக்களும்"
திரு கா. ம. வேங்கடராமையா

15. "தெய்வப்பனுவல்களில்
திருக்குறள்"
(நாலாயிர திவ்யபிரபந்தத்தில்
திருக்குறள்) திரு கா.ம. வேங்கடராமையர்

16. தெய்வப்பனுவல்களில்
திருக்குறள்"
(12-ம் திருமுறை
திருத்தொண்டர் புராணத்தில்
திருக்குறள்) திரு கா. ம வேங்கடராமையா

## நடைபெறும் பணி

17. இலக்கணக் குறியீட்டு விளக்க அகராதி (எழுத்ததிகாரம்)

திரு சு. சுவாமிஐயா.
திரு அ. ஆனந்தநடராசன்.

## திருவருட்பாவெளியீடு:—

'வள்ளலார்' என்று சிறப்பித்து அழைக்கப்பெறும் வடலூர் இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல்களின் தொகுப்பே "திருவருட்பா" ஆகும். திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

வள்ளல் பெருமானின் புகழ்பரப்பும் நற்றொண்டரான அருட்பெருஞ்செல்வர் பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் அவர்கள் திருவருட்பாவிற்கு விரிவுரை ஒன்று வெளியிட எண்ணி, அப்பணியினை அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பேரறிஞரும், உரைவேந்தர் என்று தமிழுலகம் புகழும் பேராசிரியருமான சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களிடம் வேண்டினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக இவ்வுரை வந்தால் பொருத்தமாக இருக்கும் என்றெண்ணித்

திரு. நா. மகாலிங்கம் அவர்கள் செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர் முத்தையவேளிடம் விரும்பி வேண்டினர். அரசர் அவர்களும் அவ்வண்ணமே வெளியிட உடன்பட, இதன் முதல் திருமுறை பல்கலைக்கழகப் பொன்விழாவில் வெளியிடப் பெற்றது.

நிறுவியோர் நினைவு விழாவில் சிறப்புரை ஆற்றவந்த தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், இவ்வுரை வெளியீட்டுத்தொடர்பான செய்திகளை அறிந்து, தொடர்ந்து இவ்வுரைகள் வெளியிடுவதற்குக் கடனாக நான்கு இலட்ச ரூபாய்களைத் தமிழ்நாடு அரசு அளிக்கும் என்று அறிவித்தார்கள்.

இதுவரையில் இவ்வரிசையில் இரண்டு நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. முதல் திருமுறையும் இரண்டாம் திருமுறையின் முதல் தொகுதியும் வெளிவந்துள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் உறுதுணையாலும் தமிழ்நாடு அரசின் உறுபொருள் உதவியினாலும் மேலும் இதன் வரிசைகள் வெளியிடப்படவிருக்கின்றன.

இவ்வுரைக்கு அணிந்துரை தந்துள்ள தமிழ் இசைக் காவலர் பத்மபூஷன் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள்,

"திருவருட்பா உரையுடன் கூடிய பகுதிகளை அனைத்துத் தமிழ் மக்களும் படித்து அருட்பெருஞ் சோதியான வள்ளல் பெருமானின் அருளைப்பெற வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறேன்"

என்று குறிப்பிடுவது ஈண்டு எண்ணி மகிழ்தற்குரியது.

## அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

### 1. சொருணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களால் ரூபாய் 25,000/- வைப்பு நிதியாக அளிக்கப்பெற்று, அவர்தம்

தாயார் பெயரால் அமைந்துள்ள இவ்வறக் கட்டளையினால் ஆண்டுதோறும் 'புலவர் திருநாள்' என இவ்விழா நடை பெறுகிறது. ஒவ்வொரு தமிழ்ப்புலவராக எடுத்துக்கொண்டு தமிழறிஞர் ஒருவர் மூன்று நாட்கள் நிகழ்த்தும் சொற்பொழிவு வரிசையாகும் இது. பின்னர் அது பல்கலைக்கழக வெளியீடாக வெளிவரும். இதுவரையில் வெளிவந்துள்ள நூல்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

1. டாக்டர் மு. வரதராசன் - இளங்கோவடிகள்
2. மறைத்திரு சேவியர் தனிநாயகம் - திருவள்ளுவர்
3. திரு சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் -கொங்குவேளிர்
4. திரு பி. திரிகூடசுந்தரம் பிள்ளை - சிலப்பதிகாரம்
5. டாக்டர் வ. சுப. மாணிக்கம் - கம்பர்
6. டாக்டர் மா. இராசமாணிக்கம் - சேக்கிழார்
7. பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார் - திருநாவுக்கரசு
8. பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை - வாலிவதை
9. இராவ்சாகிப் திரு கு. கோதண்டபாணி பிள்ளை - கம்பரும் மெய்ப்பாட்டியலும்
10. பேராசிரியர் ச. தண்டபாணி தேசிகர் - நக்கீரர்
11. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் - மாணிக்கவாசகர்
12. பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் - மணிமேகலை
13. பேராசிரியர் அ. நடேச முதலியார் - குமரகுருபரர்
14. டாக்டர் மெ. சுந்தரம் - கல்லாடர்
15. டாக்டர் ச. வே. சுப்ரமணியன் - தாயுமானவர்
16. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் - சிவஞானமுனிவர்
17. பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் - திருத்தக்கதேவர்

18. பேராசிரியர் மு. அருணாசலம் - இளம்பூரணர்
19. தவத்திரு குன்றக்குடி அடிகளார் - திருவள்ளுவர்
20. டாக்டர் சி. பாலசுப்ரமணியன் - ஆண்டாள்
21. திருக்குறளார் வீ. முனிசாமி - திருவள்ளுவர்

## 2. தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் சொற்பொழிவு அறக்கட்டளை

காரைக்குடி திரு எஸ். என். ஏ. எஸ். ஏ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் ரூபாய் 10,000/- வைப்பு நிதி பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்று, "தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் சொற்பொழிவு அறக்கட்டளை" தோற்றுவிக்கப்பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் திருவாசகம் பற்றி ஐந்து தொடர் பொழிவுகள் நிகழ்த்தவும், அவை நூலாக வெளியிடப்பட்டுக் குறைந்த விலையில் விற்கப்படவும் அறக்கட்டளை வழி வகுக்கிறது.

முதற் சொற்பொழிவு, திருக்கோயில் ஆசிரியர் திரு என். ஆர். முருகவேள் அவர்களாலும், இரண்டாம் சொற்பொழிவு பேராசிரியர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களாலும் மூன்றாம் சொற்பொழிவு பேராசிரியர் திரு. அ. சங்கர நாராயணன் அவர்களாலும், நான்காம் சொற்பொழிவு, பேராசிரியர் திருமுறைச் செல்வர் திரு க. வெள்ளைவாரணனார் அவர்களாலும் நிகழ்த்தப்பெற்றுள்ளன.

## 3. ஆடூர் எம். இரத்தினசபாபதி பிள்ளை பன்னிரு திருமுறை சைவசித்தாந்த அறக்கட்டளை

ஆடூர் எம். இரத்தினசபாபதி பிள்ளை அறநிலையத்தின் அறங்காவலர் திரு ஆர். நடராசன் அவர்களால் 1981-இல் ரூபாய் 25,000/- வைப்புநிதி அளிக்கப் பெற்றுத் தோற்று விக்கப் பெற்றது.

பன்னிரு திருமுறை சைவசித்தாந்த சாத்திரம் பற்றி மூன்று தொடர் சொற் பொழிவுகள் நிகழ்த்தவும், அவற்றை நூல்களாக வெளியிடவும்,பன்னிரு திருமுறையில் தேர்ந்தவர்க்கு ஒரு பரிசும்

சைவசித்தாந்தத்தில் தேர்ந்தவர்க்கு ஒரு பரிசுமாக அளித்திடவும் இவ்வறக்கட்டளை வழி வகுக்கிறது.

முதல் சொற்பொழிவு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களாலும், இரண்டாவது சொற்பொழிவு புலவர் திலகம் திரு. கீரன் அவர்களாலும் நிகழ்த்தப்பெற்றன.

## பல்கலைக்கழக வெளியீடுகள்:-

### 1. தமிழ் வெளியீடுகள்

ஆராய்ச்சி மையமாகத் திகழ்கின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அனைத்துத் துறைகளிலும் பன்மொழிகளிலும் 500-க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுப் பிற பல்கலைகழகங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பினைப் பெற்றுள்ளது. இவற்றுள், தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, கலை, பண்பாடு, மொழியியல் முதலிய பொருள் குறித்து நூறு நூல்கள் வரை வெளிவந்துள்ளன.

1. பாரிகாதை - பாஷாகவிசேகர் வித்துவான் இரா. இராகவையங்கார் —1937
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம்-டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி ——1945
3. Historical Tamil Reader- -Dr-P. S. Subramaniya Sastri—1945
4. Tholkappiyam porulathikaram part I—Translation into English —E. S. Varadaraja Iyer—1947
5. The elephant in the Tamil land —E. S. Varadaraja Iyer —1945
6. Tholkappiyam Porulathikaram part II-Translation into English —E. S. Varadarja Iayer—1948
7. Tree worship and ophiolatry in the Tamil land —G. Subramaniya Pillai —1948

8. தித்தன் - பாஷாகவி சேகர வித்துவான் இரா. இராகவையங்கார் — 1949

9. கோசர் - பாஷாகவி சேகர வித்துவான் இரா. இராகவையங்கார் — 1951

10. பட்டினப்பாலை - பாஷாகவிசேகர வித்துவான் இரா. இராகவையங்கார் — 1951

11. இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி - பாஷாகவிசேகர வித்துவான் இரா. இராகவையங்கார் — 1952

12 கௌடலீயம் பொருணூல் - மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் பி. எஸ். இராமானுஜாசாரியார் - 1955

13. Advanced Studies in Tamil Prosody Dr. A. Chidambaranathan Chettiar - 1957.

14. தமிழ் இலக்கிய வரலாறு - முதல் தொகுதி - வித்துவான் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் - 1957

15. தமிழ் இலக்கிய வரலாறு - இரண்டாம் தொகுதி வித்துவான் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் - 1957

16. A History of Jain, Buddhist and Vaishnava Literature A D. I-1100 E. S. Varadaraja Iyer - 1957

17. ஐங்குறுநூறு (பகுதி - 1) - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை - 1957

18. தமிழிலக்கியம் - திரு. சு. இராமசாமி நாயுடு - இரண்டாம் பதிப்பு - 1957

19. தொல்காப்பியம் - வித்துவான் க. வெள்ளைவாரணனார் - 1957

20. குறுந்தொகை விளக்கம் - பாஷாகவிசேகர வித்துவான் இரா. இராகவையங்கார் - 1958

21. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி - பாஷாகவிசேகர வித்துவான் இரா. இராகவையங்கார் - இரண்டாம் பதிப்பு -1958

22. ஐங்குறுநூறு – பகுதி 3 - ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை – 1958

23. சைவ இலக்கிய வரலாறு – வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை – 1958

24. பிற்காலச் சோழர் வரலாறு தொகுதி-1 – தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் - 1958

25. பிற்காலச் சோழர் வரலாறு - தொகுதி 2 தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் -1958

26. நாடகக்கலை - ஒள்வை தி. க. சண்முகம் – 1959

27. இளங்கோவடிகள் – மு. வரதராசன் – 1960

28. கவி இரவீந்திரநாத தாகூர் – வாழ்க்கை வரலாறு – தெ. பொ. மீனாட்சிசுந்தரம் – 1961

29. பிற்காலச் சோழர் வரலாறு – தொகுதி 3 தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் - 1961

30. தொல்காப்பியம் - நன்னூல் – க. வெள்ளைவாரணனார் – 1962

31. கொங்குவேளிரின் பெருங்கதை – சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் - 1962

32. A New Approach to Thiruvasagam - Mrs. Ratna – navarathinam – 1962

33. தமிழிலக்கிய வரலாறு தொகுதி 1 - தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் - 1964

34. தமிழிலக்கிய வரலாறு தொகுதி 2 தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் – 1964

35. தமிழிலக்கிய வரலாறு -தெ. பெ. மீனாட்சிசுந்தரம் - 1965

36. திருவள்ளுவர் – எஸ். தனிநாயகம் – 1968

37. கம்பர் – டாக்டர் வ. சுப. மாணிக்கம் - 1968

38. சிலப்பதிகாரம் – தி. திருகூடசுந்தரம்பிள்ளை – 1969

39. சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் – மயிலை சீனி. வேங்கடசாமி – 196

40. சேக்கிழார் - மா. இராசமாணிக்கனார் - 1969

41. வாலிவதை - கோ. சுப்பிரமணியபிள்ளை - 1969

42. தொல்காப்பியம் - க. வெள்ளைவாரணனார் - 1970

43. திருநாவுக்கரசர் - சரவண. ஆறுமுக முதலியார் - 1970

44. A New Approach to Thiruvasagam II Edition - Mrs - RatnaNavarathinam - 1971

45. கம்பரும் மெய்ப்பாட்டியலும்- கோதண்டபாணிப் பிள்ளை - 1972

46. சிறுகதை - மீ. ப. சோமசுந்தரம் - 1972

47. திருக்குறள் ஒப்புமை வளர்ச்சி
ச. தண்டபாணிதேசிகர் — 1972

48. நக்கீரர்—
ச. தண்டபாணி தேசிகர் - 1973

49. திருக்குறள் பொருளகராதி -
டாக்டர். மு. கோவிந்தசாமி - 1973

50. இலக்கணச் சிந்தனைகள் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1973

51. இலக்கியச்சிந்தனைகள் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1973

52. மணிவாசகர் -
அ. ச. ஞானசம்பந்தம் - 1974

53. காப்பியங்களில் திருக்குறள் -
ச. தண்டபாணி தேசிகர் - 1974

54. தமிழ்ப்புலவர் வரலாற்றுக்களஞ்சியம் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1974

55. சாத்தனார் -
அ. மு. பரமசிவானந்தம் - 1975

56. வள்ளுவரும் கம்பரும் –
ச. தண்டபாணி தேசிகர் – 1975

57. திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் –
டாக்டர் மு. கோவிந்தசாமி – 1975

58. குமரகுருபரர் –
அ. நடேசமுதலியார் – – 1976

59. சிலப்பதிகாரச்சிந்தனைகள் –
தமிழ்த்துறை ஆசிரியர்கள் – 1976

60. திருத்தக்கதேவர் – பேராசிரியர்.
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் – 1977

61. தாயுமானவர் –
டாக்டர். ச. வே. சுப்ரமணியம் – 1977

62. சிலப்பதிகாரம் – மணிமேகலை – காப்பியமரபு
– டாக்டர். கா. இலட்சுமணசாமி – 1977

63. சிலப்பதிகார யாப்பமைதி –
டாக்டர். ந. வீ. செயராமன் – 1977

64. புகழேந்தியும் நளவெண்பாவும் –
வெ. பழநியப்பன் – 1977

65. தொல்காப்பியம் -
க. வெள்ளைவாரணனார்

66. குருநானக் –
சி. இராமலிங்கம்

67. பாரிகாதை – (இரண்டாம் பதிப்பு)
இரா. இராகவையங்கார் – –

68. Fine Arts and crafts in Pattupattu and Ettuthogai —S. Vaithialingam - –1977

69. A Survey of the Sources for the History of the Tamil Literature Dr. M. Govindaswamy - –1977

70. Advanced Studies in Tamil Prosody– Dr. A. Chidambara - nathan Chettiar - 1977

71. பரிமேலழகர் -
டாக்டர் மு.கோவிந்த சாமி - 1977

72. தொல்காப்பியச் சிந்தனைகள் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1973

73. Buddhism as expounded in Manimekalai
- Dr. S. N. Kandaswamy - 1978

74. Buddhism in the Tamil Country
T. N. Vasudeva rao - 1978

75 தமிழ்நாடகப்பரிணாம வளர்ச்சி -
டாக்டர் ஆறு. அழகப்பன் - 1979

76. திருக்குறள் சிந்தனைகள் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1979

77. மணிமேகலைச் சிந்தனைகள் -
தமிழ்த்துறை ஆசிரியர்கள் - 1979

78. A Study of St. Thirugnanasambandar-Dr. P. Soundra

79. கௌடலீயம் பொருணூல் - முதற்பாகம்
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் -
பி. எஸ். இராமானுஜாசாரியார் - (இரண்டாம் பதிப்பு)

80. கௌடலீயம் பொருணூல் - இரண்டாம்பாகம் -
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் -
பி. எஸ். இராமானுஜாச்சாரியார்-(இரண்டாம் பதிப்பு)

81. திருவருட்பா - முதற் பகுதி -
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை - 1979

82. வள்ளுவத்தில் மெய்ப்பொருட் சுவடுகள் -
ச. தண்டபாணிதேசிகர் - 1979

83. தமிழ்இலக்கிய வரலாறு - 1. 1100 -
ஈ. எஸ். வரதராச ஐயர்

84. இளம்பூரணர் - மு. அருணாசலம்

85. இலக்கியச் சிந்தனைகள் –
தமிழ்த்துறை ஆசிரியர்கள்

86 இலக்கணச் சிந்தனைகள் –
தமிழ்த்துறை ஆசிரியர்கள்

87. திருக்குறளும் தமிழ் பாரதநூல்களும் –
வித்துவான் ந. இராமலிங்கம்

88. திருவள்ளுவர் –
தவத்திரு குன்றக்குடி அடிகளார் -1982

89. திருவாசகம் –
ந. ரா. முருகவேள் - 1982

90. குறுந்தொகை விளக்கம் –
ரா. இராகவையங்கார் – – 1982

91. கல்லும் கனியாகும் –
சுப. அண்ணாமலை – 1984

92. கல்வெட்டுகள் – 30

93. சைவசித்தாந்த சொற்பொழிவு -
திரு. திருமுருக கிருபானந்தவாரியார் – 1984

94. தமிழ்ப்புலவர் வரலாற்றுக்களஞ்சியம் –
இரண்டாம் தொகுதி - 1984
டாக்டர் வெ. பழநியப்பன் -
உ. பழனி

## 2. தமிழ் ஆராய்ச்சித் துறை வெளியீடுகள்:

தமிழ் ஆராய்ச்சிக் கென்று ஒரு தனித்துறையினை அமைத்த பெருமை அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திற்கு உண்டு. 1952-ல் தொடங்கப்பெற்று 1969 வரை இத்துறை தனித்துறையாக இயங்கி வந்தது. தமிழ்மொழி உள்ளளவும் ஆய்வாளர்கள் அறிய விரும்பும் ஆராய்ச்சிக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட நூல்கள் பலவற்றை இத்துறை வெளியிட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது கம்பரின் இராமாயணச் செம்பதிப்பாகும். டாக்டர் வ. சுப. மாணிக்கனார்

'கம்பன்' இராமாயணப்பதிப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழன்னைக்கு ஆற்றிய பணிகளுள் தலையானதும் பெரியதும் ஆகும்' எனத்தம் பதிப்புரையில் குறிப்பிடுவர். கம்பராமயணச் செம்பதிப்பு 18 தொகுதிகள் பற்றிய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

1. கம்பராமாயண பாலகாண்டம் தொகுதி - 1 - 1957
2. மேற்படி மேற்படி தொகுதி - 2 - 1958
3. மேற்படி அயோத்தியாகாண்டம் தொகுதி -1 - 1959
4. மேற்படி மேற்படி தொகுதி -2 - 1961
5. மேற்படி மேற்படி ஆரண்யகாண்டம் தொகுதி -1 - 1963
6. மேற்படி மேற்படி மேற்படி தொகுதி -2 - 1965
7. மேற்படி மேற்படி கிட்கிந்தாகாண்டம் - தொகுதி - 1 - 1966
8. மேற்படி மேற்படி மேற்படி தொகுதி - 2 - 1967
9. மேற்படி மேற்படி சுந்தரகாண்டம் - தொகுதி-1-1955
10. மேற்படி மேற்படி மேற்படி தொகுதி - 2 - 1956
11. மேற்படி மேற்படி யுத்தகாண்டம் தொகுதி - 1 - 1968
12. மேற்படி மேற்படி மேற்படி தொகுதி - 2 - 1970
13. மேற்படி மேற்படி மேற்படி - தொகுதி - 3 - 1971
14. மேற்படி மேற்படி மேற்படி - தொகுதி - 4 - 1970
15. மேற்படி மேற்படி மேற்படி - தொகுதி - 5 - 1970
16. மேற்படி மேற்படி மேற்படி - தொகுதி - 6 - 1971
17. ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் - தொகுதி - 1 - 1977
18. ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் - தொகுதி - 2 - 1979

## 3. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அறக்கட்டளை வெளியீடுகள்:

திருப்பனந்தாள் திருமடம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் வழியாக மக்களுக்கு மலிவுப்பதிப்புகளாகச் சமயம், தமிழ் தொடர்பான நூல்கள் கிடைக்க வழிவகை செய்துள்ளது. அந்த அடிப்படையில் ஒரு பெரும் அறக்கட்டளை நிறுவியுள்ளது. அடக்கவிலையில் 1/4 பங்கு விலையில் விற்கவேண்டும் என்ற திட்டத்தில் இதுவரை ஐம்பது நூல்கள் வெளிவந்துள்ளன. பொதுவுடைமை நாட்டு நூல்களை விடத்திருப்பனந்தாள் நிதிய மலிவு வெளியீடுகளின் விலை குறைவானதாகும்.நூல்கள்பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கம்பர் நினைவுப் பரிசுப்பாடல் தொகுதி - 1944
2. சேக்கிழார் நினைவுப்பரிசுப் பாடல் தொகுதி - 1944
3. ஆதி குமரகுருபரர் பரிசுப்பாடல் தொகுதி - 1945
4. Introduction and History of Saiva Siddhanta
   — G. Subramania Pillai - 1947
5. Lectures on Saiva Siddhanta-1948
   — Prof. R. Ramanujachari—1952
6. Lectures on Saiva Siddhanta-1950
   — M. Balasubramania Mudaliar - 1951
7. -do- -do- - 1952
   —K. Vajravelu Mudaliar — 1953
8. -do- -do- - 1953
   — S. Sachithanandam Pillai - 1954
9. தேவாரத்திருமுறை-பரிசுப்பாடல் தொகுதி 1-1954
10. தேவாரததிருமுறை-பரிசுப்பாடல் தொகுதி-2-1954
11. சிவஞானபோதம்-ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை-1954
12. ஞானாமிர்தம்-ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை-1954
13. Lectures on Saiva Siddhanta
    —Prof. T. M. P. Mahadevan—1955

14. -do- -do- -1954
—Yogi Suddhananda Bharathi—1955

15. -do- -do- -1957
— K. M. Balasubramaniam—1959

16. Lectures on Saiva Siddhanta
— Dr. V. A. Devasenapathi—1959

17. பன்னிருசைவத்திருமுறைகள்-
க வெள்ளைவாரணனார் —1961 (முதற்பகுதி)

18. பன்னிரு சைவத்திருமுறைகள் -
க. வெள்ளைவாரணனார்—1962(இரண்டாம்பகுதி)

19. திருவாசகம் -
நீ. கந்தசாமிப்பிள்ளை--1962

20. Lectures on Saiva Siddhanta
V. A. Devasenapathi – 1963

21. Collected lectures on Saiva Siddhanta
— 1946-1954-1964

22. The Relevance of Saiva Siddhanta
N. Murugesa Mudaliar-1968

23. பன்னிரு திருமுறைவரலாறு
—க. வெள்ளைவாரணனார் —1969-இரண்டாம்பகுதி

24. யாப்பருங்கலக்காரிகை-
சு. சாமிஐயா—1973 முதற்பதிப்பு

25. பன்னிருதிருமுறை வரலாறு - முதற்பாகம் -
க. வெள்ளைவாரணனார் —1976

26. திருமந்திரமாலை - 300 -
ந. சிவப்பிரகாச தேசிகர் - 1979

27. ஐங்குறுநூறு-முழுவதும்
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை—1978

28. தமிழ் இலக்கிய வரலாறு - 13, 14, 15 ஆம் நூற்றுண்டுகள்
—தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் - 1777

25. தமிழ் இலக்கிய வரலாறு -250-600-
திவை. சதாசிவப்பண்டாரத்தார்-1977

30. நம்பியகப்பொருள்
—வெ. பழநியப்பன்-1977

31. சைவஇலக்கிய வரலாறு-
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை-1978

32. தமிழ் வரலாறு-
ரா. இராகவையங்கார்-1978

33. தொல்காப்பியம் - க. வெள்ளைவாரணனார் - 1978

34. Collected Lectures on Saiva Siddhanta
-1963—74—1978

35. The Relevance of Saiva Sidhanta
—N. Murugesa Mudaliyar

36. தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-இளம்பூரணர்
கு. சுந்தரமூர்த்தி-1980

37. Siddhanta Saivam in essence and manifestation
Mrs. Ratnanavarathinam 1979

38. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-சேனாவரையர் -
கு. சுந்தரமூர்த்தி-1980

39. பன்னிருதிருமுறைவரலாறு-இரண்டாம் பாகம் -
க. வெள்ளைவாரணனார்-1982

40. நன்னூல்விருத்தியுரை-
சோம. இளவரசு-1982

41. குறுந்தொகை-
உ. வே. சாமிநாதஐயர்-1983

42. திருவாசகம்
நீ. கந்தசாமிபிள்ளை-1984

43. புறப்பொருள் வெண்பாமாலை-1984

44. தொல்காப்பியம - நன்னூல் எழுத்ததிகாரம் -
க. வெள்ளைவாரணனார்-1984

அண்ணாமலைப் பல்கலைகலைக்கழகத் துணை வேந்தர்களாக இருந்த சில பெரியோர்கள் தமிழ்ப் பேராசிரியராக இல்லாவிட்டாலும், ஆழ்ந்த தமிழறிவும், தமிழ்க்காதலும், கொண்டவர்களாக விளங்கியிருக்கின்றார்கள். 1951-52இல் துணை வேந்தராக விளங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியார், சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தைப்பதிப்பித்த பெருமைக்குரியவர். மேலும், அவர் டாக்டர். இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடன் தமிழிசையைக் காத்த தானைத் தலைவர்களில் ஒருவராக விளங்கியிருக்கின்றார். 1955 முதல் 1961 வரையில் துணை வேந்தராகப் பணிபுரிந்த தி. மு. நாராயணசாமிப்பிள்ளை இறை இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொணடவர்; தமிழிசைச் சங்கத்தின் தலைவர்ாக அவர் விளங்கி, நிலையான தமிழிசை வளர்ச்சிக்கு வழி கண்டவர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

## துணை வேந்தர் பதவியில் தமிழ்ப் பேராசிரியர்கள்.

பல்கலைக் கழகங்களில் பொறுப்பும் சிறப்பும் உடைய பதவி, துணை வேந்தர் பதவியாகும். இப்பதவி, இப் பல்கலைக் கழக இணைவேந்தர், மாநிலத்தை ஆட்சிசெய்யும் அரசினர், நாட்டு ஆளுநர் இவர்களின் கலந்துரையாடலுக்குப் பின்வரும் கருத் தொப்புமையினாலேயே தீர்மானிக்கப்படுவதாகும். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் முதலமைச்சர் பக்தவச்சலம் காலத்திலும், டாக்டர் வ. சுப. மாணிக்கனார், புரடசித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்திலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்குத் துணை வேந்தராக நியமனம் செய்யப்பெற்றனர் அண்ணாமலைப் பலகலைக் கழகத்தில் நி ழ்நிலைத் துணை வேந்தர் பதவி ஏற்பட்ட காலங்களில் செந்தமிழ்க்காவலர் டாக்டர் அ. சித பரநாதனார் ஒருமுறையும், முத்தமிழ் வித்தகர் லெ. ப. கரு. இராமநாதனார் ஐந்து முறையு இருந்திருக்கின்றனர்.

## பேராசிரியர் இராமநாதனார்.

1953-ல் தமிழ்க்கீழைக் கலைத்துறையின் புல முதன்மையராக முத்தமிழ் வித்தகர் பண்டித வித்துவான் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் பணியாற்றிய போது சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெறும் பல்வகை மலர்களையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அம்முயற்சியின் பயனாக நூற்றுக்கும் மேற்பட்ட மலர்களைத் தொகுத்துத் தக்க முறையில் அவற்றைப்பாதுகாத்துத் தமிழ்த் துறைக்கு வரும் அறிஞர் பெருமக்கள் கண்டு மகிழுமாறு அமைததுள்ளனர்.

பேராசிரியர் அவர்கள் தமிழ்த்துறைத் தலைவராக இங்கு இருந்தகாலத்து, பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவியுடன் 'தமிழ்புலவர் வரலாற்றுக் களஞ்சியத்தினைத்' தொகுத்து வெளியிடும் ஒரு திட்டத்தினை மேற்கொண்டார். அதன் பயனாக இதுவரையில் இரு தொகுதிகள் வெளிவந்துள்ளன.

அண்ணாமலை அரசர், முத்தையவேள் ஆகியோர்தம் மணிவிழாமலர்கள், பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா மலர், ராணி மெய்யம்மை ஆச்சி, குமாரராஜா முத்தையா ஆகியோர் தம் நினைவு மலர்கள், தமிழிசைச் சங்க வெள்ளிவிழா மலர் ஆகிய இம்மலர்க்குழுக்களில் முக்கியப் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் சிலப்பதிகாரம் புகார்க்காண்டத் திற்கு உரையெழுதிப் பதிப்பித்த முன்னாள் துணைவேந்தர் டாக்டர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் ம ரி விழா மலரினை உருவாக்கிய பெருமையும் பேராசிரியர் அவர் களுக்கு உண்டு.

சங்கப் புலவர்களை நினைவுபடுத்தும் பேராசியர் வர் கள் கீழைக்கலைத்துறைப்பேராசிரியராகவும் முதன்மையராக வும் இருந்தபோது இன்று தமிழகத்தில் தமிழாசிரியர்களாக பணி யாற்றிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்ஆசிரியர் கள் பேராசிரியருக்குக்கீழ் புலவர் பட்டத்தையும் ஆசிரிய பயிற்சிப் பட்டத்தையும் பெற்றவர்கள் ஆவார்கள். சென்னை

தமிழிசைச் சங்கம் தொடங்கிய காலத்திலிருந்தே அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் முதன்மையானவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் நீண்டகால அனுபவமிக்க மூத்த உறுப்பினர். இவர்தம் முப்புலப் புலமையைச் சிறப்பித்துத் தருமபுர ஆதீனம் முத்தமிழ் வித்தகர் என்ற பட்டத்தினை அளித்தது.

## அரசின் பரிசும் விருதும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆசிரியர்கள் எழுதிய நூல்கள் அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசினைப்பெற்றுள்ளன. தமிழ்த்துறையின் தலைவராக விளங்கிய பேராசிரியர், செம்மல் டாக்டர் வ. சுப. மாணிக்கனாரின் 'கம்பர்' எனும் நூலும், பேராசிரியர் திருமுறைச் செல்வர் வித்துவான் க. வெள்ளைவாரணனாரின் 'பன்னிருதிருமுறை வரலாறு' என்னும் நூலும் தமிழக அரசின் பரிசினைப் பெற்றமை தமிழ்த்துறைக்குக் கிடைத்த பெருமையாகும். இதேபோல் நாடகத்துறையில் நற்பணிகள் பலபுரிந்த இன்றையத்தமிழ்த்துறைத் தலைவா டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களின் நாடக நூலான எள்ளல் நாடகத்திற்கு பரிசும் நாடக ஆய்வினைப் பாராட்டி 'கலைமாமணி' என்ற பட்டத்தினையும் பொற்பதக்கத்தையும் அளித்தது.

## மிழ்த்துறை மாணவர்கள்

தமிழ்த்துறையில் பட்டம் பெற்று பல்வேறு துறைகளில் நற்பணிபுரியும் பழைய மாணவர்கள் சிலர் பெயர்கள் வருமாறு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், திரு குமரி. அனந்தன், திரு ப. நெடுமாறன், இந்திரா பார்த்தசாரதி, பேராசிரியர் ந. ரா. முருகவேள், டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், டாக்டர் எஸ். அகத்தியலிங்கம், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், டாக்டர் இரா. சாரங்கபாணி, டாக்டர் சிங்காரவேலு, டாக்டர் மா. இளையபெருமாள், திரு தி. அ. அழகிய சொக்கலிங்கம், பேராசிரியர் வ. பெருமாள், கொண்டல் கே. எஸ். மகாதேவன், டாக்டர் முத்து சண்முகம்,

டாக்டர் கு. திருமேனி, டாக்டர் பா. சௌந்திரா, செல்வி சோ. பாகீரதி, திருமதி சரோஜினி தேவி, பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், டாக்டர் தனிநாயக அடிகள், கவிஞர் உலகநாதன், திரு அறிவுடைநம்பி, பேராசிரியர் க. திருமாறன், பேராசிரியர் எஸ். உருத்திராபதி. பேராசிரியர் ரம்போலா மாஸ்கரெனேஸ், பேராசியை ராஜரத்தினம், பேராசிரியை ராஜாமணி, பேராசிரியை நாகரத்தினம், பேராசிரியை நாகம்மாள், தண். கி. வேங்கடாசலம், சிற்பி, பாலசுப்பிர மணியம், டாக்டர் அ. மா. பரிமணம், டாக்டர் காத்தையன், டாக்டர் விஜயவேணுகோபாலன், காந்திமதி நாதன், குறிஞ்சிச்செல்வன், மருதூர் இளங்கண்ணன், டாக்டர் நாச்சிமுத்து, ப. சிவகாமசுந்தரி.

## அஞ்சல் வழிக்கல்வித்தமிழ்

அஞ்சல்வழிக்கல்வித்தமிழ்ப்பிரிவில் முதுகலை, பி. லிட், அடிப்படை நிலை (Foundation Course I & II), இளங்கலை முதலியபிரிவுகள் பயிற்று விக்கப்படுகின்றன. இவ்வாண்டு முதுகலைப்பிரிவில் இரண்டு ஆண்டுகளிலும் 471 மாணவர்கள் பயில்கின்றனர். பி. லிட் வகுப்பில 564 மாணவர்கள் பயில் கின்றனர். மாணவர்களுக்கு நன்முறையில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள், அஞ்சல் வழியில் அனுப்பப்படும் பாடங்கள், அஞ்சல் வழி மையத்தில் வைக்கப்பட்டு இருக்கும் ஒலிப்பதிவு நாடாக்கள், மாணவர்களுக்கு நடத்தப்படும் பாடக்கருத் தரங்குகள் சிறப்பாகவும் செம்மையாகவும் இருப்பதால், மரபு வழியில் பெருமை பெற்ற தமிழ்த்துறை போல இத்துறையும் புகழ்பெற்று வளர்ந்து வருகிறது. இத்துறையில் பணிபுரியும் ஆசிரியர்கள்.

### இணைப்பேராசிரியர்

திரு. வெ. செயராமன்.

### ஆசிரியர்கள்

திரு துரை. பட்டாபிராமன்.
டாக்டர் பழ. முத்துவீரப்பன் (படிப்பு மையம்).
திரு கோ. நச்சினார்க்கினியன் (படிபபுமையம்)

பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருந்த முத்தைய வேள் அவர்கள் நாளும் பல்கலைக் கழகத்தின் மேன்மையைச் சிந்தித்துச செயலாற்றி வந்தார்கள். பரந்த அறிவும், எதிர்கால நோக்கும், நாட்டின நடப்பிற்கேற்ப ஒன்றினைச் சீர் தூக்கிப் பார்க்கும் சிந்தனையும் பல்கலைக் கழகத்தின் பூரித்த வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. முத்தையவேள் இப்பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருக்கும் பேற்றினை நாடு பெற்றதால் அறிவாராய்ச்சி உலகம் போதிய ஊக்கம் பெற்றுள்ளது. சிறப்பாகத் தமிழ் மக்கள் அதன் பயனை அடைந்து வருகின்றனர்கள்.

## கல்விக் கோயில்:—

வளர்ச்சியினறி ஒரு கழகம் தன் வயதால் மட்டும் விழாக் கொள்வதுண்டு. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கடலை அள்ளிக் குடித்த அகத்தியர் வந்தாலும் கூடக் குடிக்கவும், சீரணிக்கவும், முடியாத நிலையில் ஆழ்ந்து அகன்ற நீண்ட வரலாற்றினைக் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாகப பெற்று வளர்ந்து வந்துள்ளது. 700 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இக்கலைக் கோயில் 36 படிப்புத் துறைகளையும் 450 ஆசிரியர்களையும், 30,000 மாணவர்களையும் கொண்டுள்ளது. இணை வேந்தர் முத்தையவேள் இப்பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தர் பேராசிரியர் சிட்டிபாபு அவர்களை கண்டெடுத்து இரு முறை துணை வேந்தராக்கியதும் அவர் தம் தொண்டுகளில் குறிப்பிடத்தக்க தாகும்.

## துணை வேந்தர் பேராசிரியர் சிட்டிபாபு

சென்ற நான்காண்டுகளாகத் துணை வேந்தராக இருந்து வரும் திரு. சை. வே. சிட்டி பாபு அவர்கள் சிறந்த ஆட்சியாளராக மட்டுமின்றி மிகச் சிறந்த தமிழறிஞராகவும் விளங்குகிறார். நாவலராகவும் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி சிறக்க நாளும் உழைப்பவராகவும் திகழ்கின்றார். தமிழ்த் துறையின் வளர்ச்சிக்கும் ஆக்கப் பணிகளுக்கும் செய்து வரும் உதவிகள் என்றும் எண்ணி மகிழ்வதற்குறியவையாம்,

மாண்புமிகு துணைவேந்தர் சை. வே. சிட்டிபாபு அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பதவி யேற்றதிலிருந்து ஆற்றி வருகின்ற பல செயல்களும், பணிகளும், பல்கலைக் கழக வரலாற்றில் சிறப்பிடம் பெறத் தக்கவை.

புதிய மருத்துவத் துறைகள், புதிய முதுநிலை வகுப்புக்கள், புதிய கட்டிடங்கள், புதிய தோட்டங்கள், புதிய விரிவுரையாளர்கள், ஆசிரியப் பெருமக்களுக்குப் புதிய உயர்த்தப் பட்ட ஊதிய விகிதம், நூலகத்திற்குப் புதிய அரிய நூல்கள், மாண வர் விடுதிகளில் புதிய வசதிகள், புதிய அனைத்திந்தியக் கருத தரங்குகள் மாநாடுகள், புதிய நல்ல நிர்வாக முறைகள், பல் மருத்துவம், கணக்கியல் பொறித்துறை (Compater Science) மற்றும் விஞ்ஞானத் துறைகளுக்குப் புதிய விலை யுயர்ந்த பொருள்களை வாங்கிச் சேர்த்தல், எங்கும் எப்போதும் நடந்திராத வகையில் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டை நடத்தி இருத்தல் ஆகியவை குறிப்பிடத் தக்கன. கடல் துறை பற்றிய ஆராய்ச்சிக்காகக் கப்பல் வாங்க முயன்று கொண்டிருக்கிறார் என்பதும் மகிழ்ந்து போற்றுதற் குரியது.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து கடின உழைப்பாலும் இறைவன் தண்ணருளாலும் மிகவும் உயர்ந்த பதவியைப் பெற்றுப் புகழின் உயர்வெல்லையை அடைந்திருக்கிறார். இவர்கள் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை உருவாக்கு வதற்கு வளபடுத்துவதற்குச் சிறந்த கருவியாக விளங்கி வருகிறார்கள் என்று டாக்டர் எம். ஏ. எம் இராமசாமி அவர்கள் துணை வேந்தர் அவர்களின் புகழினை அறிஞர்கள் பலர் கூடியிருந்த அவையில் பாராட்டி இருப்பது என்றும் நினைந்து மகிழ்தற்குரியது

அருங் குணத்தினராய் ஆட்சித் திறத்தினராய் அன்பு மிக்கவராய் இரக்கஉணர்வுஉடையவாரய் உறுதியும் துணிவும் நிறைந்தவாராய் அனைத்திற்கும் மேலாய் அறிவு சான்ற ஒரு நல்லாசிரியராய் இருந்து பல்கலைக் கழகத்தைத் தம்கண் போலக் காத்து நாளும் வளர்த்து வருகிறார். தமிழிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிற பேராசிரியர் ஒருவர்

துணைவேந்தராக கிடைத்தமையால் இன்றையத் தமிழ்த்துறை சீரும் சிறப்புமாக மேன் மேலும் வளர்ச்சி பெற்று வருகிறது.

## தமிழ்த்துறை-இன்றைய நிலை.

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்குப் பிறகு 1—4—84- ஆம் நாளன்று அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் தலைவராகக் கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் பொறுப்பேற்றார்கள். பெருமித வரலாறுடைய தமிழ்த்துறையில் பணியாற்றும் நுண்மாண் நுழைபுலம் கொண்ட ஆசிரியப் பெருமக்களின் விபரம் பின்வருமாறு:—

### தமிழ்த்துறைத்தலைவர்:—

கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன்

### இணைப்பேராசிரியர்கள்:—

1. திரு செ. வைத்தியலிங்கம்
2. திரு சிவ. திருநாவுக்கரசு

### விரிவுரையாளர்கள்:—

3. திரு சு. சுவாமிஐயா
4. திரு சோம. இளவரசு
5. திரு ச. மெய்யப்பன்
6. திரு க. தியாகராசன்
7. டாக்டர் வெ. பழநியப்பன்
8. திரு அ. ஆனந்தநடராசன்
9. திரு அழ. பழநியப்பன்
10. திரு ப. தங்கராசு
11. திரு செ சந்திரசேகரன்
12. திரு சுப. கோவிந்தராசன்

## உரையாளர்

13. திரு. க. இராமச்சந்திரன்

எம். ஏ., எம். இ. எல்., எம். பில். வகுப்புக்கள் நடைபெறும் தமிழ்த்துறையில் பி. எச். டி. ஆய்வு செய்ய ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். ஆசிரியப்பெரு மக்கள் தம் பணிகளுடன் ஆய்வுப் பட்டங்களுக்கான ஆராய்ச்சிகளையும் செய்து வருகின்றனர். தனிநிலை ஆய்வுகளாகச் சில தலைப்புக்களிலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். தமிழ்த்துறையில் நடப்பு ஆண்டில் (1983-84) டாக்டர் பட்டத்திற்கான தம் ஆய்வேடுகளை முடித்தளித்த ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் பெயர்களும் அவர்தம் தலைப்புக்களும பின்வருமாறு;-

### ஆசிரியர்கள் :-

1. திரு சு. சுவாமிஐயா
   "சிவஞான முனிவரின் காஞ்சிப்புராணம்-ஓர் ஆய்வு
2. திரு அ. ஆனந்தநடராசன்.
   "தமிழில் தூது இலக்கிய வளர்ச்சி"
3. திரு சு. கோவிந்தராசன்.
   "கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணம்-ஓர் ஆய்வு'

### ஆய்வு மாணவர்கள் :—

4. திரு சி. சிவசங்கரன்.
   "கலிப்பா ஓர் ஆய்வு"
5. திரு. என். இராமானுசம்
   பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் நூல்கள் ஒரு திறனாய்வு,
6. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி
   இளம்பூரணர் உரை-ஓர் ஆய்வு,
7. திரு. ம. மதியழகன்
   மலேசியத்தமிழ் நாவல்கள்-ஓர் ஆய்வு,

தமிழ்த்துறையிலும் அஞ்சலவழிக்கல்வித் துறையிலும் பல்கலைக்கழகத்திலுள்ள பிற பிரிவுகளிலும் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் தலைப்புக்கள் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு. செ. வைத்தியலிங்கம் | — நம்பியாண்டார் நம்பிகள் நூல்கள் |
| 2. | திரு. சிவ. திருநாவுக்கரசு | — கந்தபுராணத்தில் காப்பியக்கூறுகள் |
| 3, | திரு. சோம. இளவரசு | — சேனாவரையர் உரைத்திறன் |
| 4. | திரு. ச. மெய்யப்பன் | — தமிழ் நூல் பதிப்பு முறைகள் |
| 5. | திரு. க. தியாகராசன் | — பண்டிதமணியின் நூல்கள் —ஓர் ஆய்வு |
| 6. | திரு. அழ. பழநியப்பன் | — காப்பியத்தலைவியர்கள் |
| 7. | திரு. ப. தங்கராசு | — அகத்தியர்—தமிழக் வரலாற்றுப் பணபாட்டுக் கண்ணோட்டம் |
| 8. | திரு. செ. சந்திரசேகரன் | — மீனவர் பாடல்—ஓர் ஆய்வு |
| 9. | திரு. வி. செயராமன் | — திருமங்கையாழ்வார் பாசுரங்கள், சுந்தரர் பதிகங்கள்—ஒப்பீடு —இயற்கை |
| 10. | திரு. து. பட்டாபிராமன் | — தமிழ்க்கல்வெட்டுக் களில் புறத்திணைக் கூறுகள் |
| 11. | திரு. சி. நம்மாழ்வார் | — நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமும் வைணவ சித்தாந்தமும் |

12. திருமதி. பி. ஞானம் — தெய்வச்சிலையார் உரைத்திறன்

13. திரு. த. இராசவன்னியன் — 1947 க்குப்பின் தமிழியல் தோற்றமும் வளர்ச்சியும்

மேலும் பிஎச்.டி. பட்டத்திற்கு ஆய்வு செய்து கொண்டு இருக்கும் மாணவர்களின் பெயர்களும் அவர்தம் தலைப்புக் களும் பற்றிய விவரம் பின்வருமாறு;

1. திரு. சா. பூபதி — தஞ்சை மாவட்ட ஆதினங் களின் திருப்பணிகள்
2. திருமதி. க. சுமதி — தாலாட்டு ஒப்பாரிப் பாடல்கள்-ஓர் ஆய்வு
3. திருமதி. க. இளமதி — ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள் -ஓர் ஆய்வு
4. செல்வி. ந. சத்தியபாமா — வரலாற்றுக்கதைப் பாடல்கள்
5. திரு. சா. உதயசூரியன் — பாவலரேறு பெருஞ் சித்திரனார் பாடல்கள் –ஓர் ஆய்வு
6. செல்வி என். சுபாஷினி — பாரத சக்தி–மகாகவியம் ஒரு திறனவுய்

## தமிழ்த்துறையில் ஆசிரியர் தம் ஆசிரியப்பணி ஆய்வுப்பணிகளுடன் தனிநிலை ஆய்வுத்திட்டமும் (1983-85) வகுக்கப்பெற்று ஆய்வுகள் செய்யப் பட்டு வருகின்றன. விபரம் வருமாறு:—

| தமிழ்த்துறைத்தலைவர் | | ஆய்வுத்தலைப்பு |
|---|---|---|
| டாக்டர் ஆறு. அழகப்பன் | — | அர்த்தசாத்திரமும் தமிழ் அறநெறிகளும் |

இணைப்பேராசிரியர்கள்

| | | |
|---|---|---|
| திரு செ. வைத்தியலிங்கம் | — | திருவருட்பாவில் அழகநுபவம் |
| திரு சிவ. திருநாவுக்கரசு | — | சைவசித்தாந்தக் கலைச் சொற்கள் |

விரிவுரையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு சு. சுவாமி ஐயா | — | செய்யுளியலும் யாப்பருங்கலக் காரிகையும்-ஒப்பீடு |
| திரு சோம. இளவரசு | — | அணியிலக்கணம் - ஒப்பீடு |
| திரு ச. மெய்யப்பன் | — | திறனாய்வியல் கலைச்சொற்கள் |
| திரு க. தியாகராசன் | — | திருவெம்பாவை - உரை வேறுபாடுகள் |
| டாக்டர் வெ. பழநியப்பன் | — | இரட்டைக்காப்பியங்களில் பாட வேறுபாடுகள் |
| திரு அ. ஆனந்தநடராசன் | — | இறையனார் அகப்பொருள் - ஓர் ஆய்வு |
| திரு அழ. பழநியப்பன் | — | தேம்பாவணி - ஒரு திறனாய்வு |
| திரு ப. தங்கராசு | — | பதிகங்கள் - ஓர் ஆய்வு |
| திரு செ. சந்திரசேகரன் | — | மீனவர் பாடல்கள் |
| திரு சு. கோவிந்தராசன் | — | திருத்தணிகை ஆற்றுப்படை |
| திரு து. பட்டாபிராமன் | — | கல்வெட்டில் யாப்பமைதி |
| திரு பழ. முத்துவீரப்பன் | — | இருபதில் கவிதை நாடகங்கள் |

உரையாளர்

| | | |
|---|---|---|
| திரு க. இராமச்சந்திரன் | — | பழமொழிகள் |

எம். பில். மாணவர்கள் இவ்வாண்டு (1983-84) ஆய்வேட்டிற்காக எடுத்துக் கொண்ட தலைப்புகள் விவரம் பின்வருமாறு;-

| | | |
|---|---|---|
| 1. | த. அகோரம் | — சீர்காழி சட்டநாத சுவாமி திருகோயில் |
| 2. | தெ. திருஞானமூர்த்தி | — இயேசு காவியம்-ஓர் ஆய்வு |
| 3. | ச. கருப்பையா | — கண்ணதாசன் பாடல்களில் ஆழ்வார்களின் தாக்கம் |
| 4. | கொ. வே. நடராசன் | — இந்திரசித்து பாத்திரப் படைப்பு |
| 5. | இரா. சுபாபதி | — ஸ்ரீ குமரகுருபரர் திங்கள் இதழ்கள் - ஓர் ஆய்வு |
| 6. | வ. திருநாவுக்கரசு | — திருப்பாப்புலியூர் பாடலீசுவரர் கோயில் |
| 7. | திருமதி ச. பங்கயச் செல்வி | — திருக்குறள் துறவறவியல்-ஓர் ஆய்வு. |
| 8. | ச. மோகன் | — திருநாகேசுவரம் நாகநாத் சுவாமி திருக்கோயில் |
| 9. | ச. திருஞானசம்பந்தம் | சிவஞான போதத்தில் பதிநிலை |
| 10. | வ. தென்கோவன் | — சிவஞான போதத்தில் பசுநிலை. |
| 11. | ப. தியாகராசன் | — சுந்தரர் தேவாரத்தில் பாசநிலை |
| 12. | செல்வி பா. மணிமேலை | — திருக்குறள் ஒழிபியல்-ஓர் ஆய்வு |
| 13. | க. இந்திரசித்து | — ஓதலாந்தையார் பாடல்கள்-ஓர் ஆய்வு |
| 14. | இ. மார்க்கண்டேயன் | — தென்னாற்காடு மாவட்ட வீரசைவர்களின் சடங்குகள் |

15. ஒ. மதிவாணன் — அ. இ. அ.தி.மு.க அரசின் தமிழ்ப்பணி ஓர் ஆய்வு

16. செல்வி இரா. இரத்தினமாலா — பாண்டிச்சேரி மீனவர் சடங்குகளும் வழிபாடுகளும்

17. செல்வி கி. தனலட்சுமி — சடகோபர் அந்தாதி-ஓர் ஆய்வு

18. த. மோகன்தாஸ் — உத்தமபாளைய வட்டார தேவாங்கர் குலச்சடங்குகள்

19. ம. முத்துசாமி — இராசபாளைய வட்டாரச் சாலியர் குலச்சடங்குகள்

20. ச. முரளி — நீலபத்மநாபன் நாவல்கள்-ஓர் ஆய்வு

21 ப. மணி — வஞ்சிக்காண்டம் - ஓர் ஆய்வு

எதிர்வரும் கல்வியாண்டில் தமிழ்த்துறையில் சில தமிழ்ப்பணிகள் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களை இந்தி, ஆங்கில மொழிகளில் மொழி பெயர்க்கவும். சமஸ்கிருத நாடக வரலாற்றினைத் தமிழில் எழுதவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளன. துறைத் தமிழாசிரியர்கள் உதவியாலும், இந்திய மொழிப்புல ஆசிரியர்கள் உதவியாலும் அம்முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது, தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் இரண்டு தொகுதிகளாக எஞ்சியுள்ள மூவாயிரம் புலவர்களின் வரலாறுகளை எழுதவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு எழுதவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்படிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு எளிதாக்கிட்டிடப் புதிய சில சான்றிதழ்கள் வகுப்புகள் (இதழியல், புத்தகவியல், மொழி பெயர்ப்பு, நாட்டுப்புறவியல்) நடத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிகுதியாகப் பயிற்சியில் அறிமுகம் இல்லாத இலக்கண நூல்கள் சிலவற்றை எடுத்து (இந்திரகாவியம்) இலக்கண விளக்கம், இலக்கணவிளக்க சூறாவளி பிரபத்த

தீபிகை, இலக்கண தீபம், பிரபந்த மரபியல், அவிநயம், காக்கை பாடினியம். வீரசோழியம், நேமிநாதம், பிரயோகவிவேகம், இலக்கணக் கொத்து,முத்துவீரியம், சுவாமிநாதம்) இலக்கணக் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புற நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்திய மொழிப்புல ஆய்விதழ் இரண்டாவது தொகுதியை யும் 1983-84-ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் கருத்தரங்குகளில் படித்தளித்த கட்டுரைகளையும் தொகுப்பு நூலாக வெளியிட அச்சுப்பணிக்குரிய ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன. பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதி உதவி தக்க முறையில் கிடைத்துள்ளதால் துறை நூலகம் எல்லா வகையிலும் மேம் பாடு அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படைப்பிலக்கியக் கர்த்தாக்களை வைத்துப்படைப்பிலக் கியப் பட்டறை (workshop on creative literature) ஒன்று நடத்திடவும் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்குச் சான்றிதழ் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. யாபபு கலைக் களஞ்சியம் ஒன்றினைத் தொகுத்து வெளியிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழு தேசிய மொழிகளில் 'பக்தி இலக்கியம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடத்திடத் தமிழ்த்துறை அனுப்பிய திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதால் இக்கருத்தரங்கு மிகச் சிறப்பான முறையில் ஜூலை 16 ஆம் தேதி நடத்திட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பல்கலைக் கழகத்தை நிறுவிய பெருங்கொடை வள்ளல் செட்டி நாட்டரசர் அறத் தந்தை அண்ணாமலை வள்ளல் அவர்கள் ஆளவை மன்றத் தொடக்கவுரையில் 'தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக் கழகத்தின் தலை சிறந்த குறிக்கோளாக 'இருக்கும் என்று குறிப்பிட்டார்கள் அந்தக் குறிக்கோளைக் கடுகளவும் தவறாது தமிழிசைக் காவலர் செட்டி நாட்டரசர் அமரர் ராஜா சர் முத்தையவேள் அவர்களும், தந்தையுடன் 1929-ஆம் ஆண்டு முதலும் 1942-ல் தாம் இணைவேந்தரான பிறகும் பின் பற்றினார்கள். மேலும் தொன்மை.

யாள தமிழ்மொழியின் வளத்தையும் நலத்தையும் வளர்த்துக் கொண்டே வந்தார்.

தமிழன்னை துயரக்கடலில் ஆழ அவர்கள் விண்ணுலகிலும் தமிழ்த்தொண்டு செய்ய 12—5—84-ஆம் நாளன்று தமிழ் கூறும் நல்லுலகத்தை விட்டுப் பிரிந்தார். அத்தமிழ்க் காவலருக்கு 21—5—84-ஆம் நாளன்று நடைபெற்ற நினைவு நாளில் தமிழ்த்துறை ஆசிரியப் பெருமக்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், அவர்தம் அளப்பரிய தொண்டுகளைப்பின்வருமாறு நினைவுகூர்ந்து ஒரு உறுதி மொழியினையும் ஒருமனமாக எடுத்துக் கொண்டனர். அவைகளையே இவ்வரலாற்றுக் கையேட்டில் இறுதிப்பகுதியாகத்தந்து நிறைவு செய்கிறோம்.

"அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பீடுமிக்க பெருமித வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தமிழவேள் தமிழிசைக்காவலர் இணைவேந்தர் அரசர் முத்தையவேள் முதன்மையாக விளங்கினார்கள். மொழி நலமும் வளமும் கருதித் தம் உடல் நலம் பேணுவது போலத் தமிழ்த்துறையின் நலம் காத்தார்கள். இப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நான்காவது தமிழ்ச்சங்கம், இப்பல்கலைக்கழகம் தமிழ்ப்பல் கலைக்கழகம் என்றெல்லாம் அழைக்கப் படுவதற்கு அவரது உள்ளம் தமிழாகி விட்டதே காரணம் எனலாம்.

## முத்தையவேளும் தமிழும்

அறத்தந்தை அண்ணாமலைவள்ளலின் அடிப்படைக் குறிக்கோள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும். அக்கொள்கைக்கோமான் தனகாலத்தில் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டது போலவே அமரர் முத்தையவேளும் எங்கெங்குத் தமிழ்வளர்ச்சி உண்டோ அங்கெல்லாம் தோன்றாத் துணையாக தமிழ்க் காவலராக விளங்கினார்கள். இணைவேந்தர் முத்தைய வேள் இப்பல்கலைக்கழகத்தில் இருபெரும் பதவிகளைத் தம் இருகண்கள் போலக் கருதுவர். ஒன்று பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவி, மற்றொன்று தமிழ்த்துறையின் தலைவர் பதவி.

எனவே, அறத்தந்தையவர்களும், அண்ணல் முத்தையவேள் அவர்களும் தலைசிறந்த தமிழ் அறிஞர்கள் தமிழகத்தின் மூலை முடுக்கில் எங்கிருந்தாலும் அவர்களை அண்ணாமலைப்பல் கலைக்கழகத்திற்கு அழைத்து வந்து தமிழ்த்துறையில் அமர்த்திப் பெருமைப்படுத்தினர்.

தமிழுக்குக் கொடுத்துச் சிவந்த புரவலர் முத்தையவேளின் பொற்கரங்களால் பொன்னாடை போர்த்தப்பட்ட தமிழறிஞர் கள் பலருண்டு. அத்தகைய சிறப்பினைப் பெற்றவர்கள்;

1. சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை
2. நாவலர் சோமசுந்தரபாரதியார்
3. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்
4. பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
5. முத்தமிழ் வித்தகர் பண்டித வித்வான் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
6. பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை
7. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
8. கல்வெட்டறிஞர் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார்
9. வரலாற்றறிஞர் மா. இராசமாணிக்கனார்
10. செந்தமிழ்க்காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார்
11. கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன்

முதலிய பலராவர்

பல்கலைக்கழக வளர்ச்சியில் பண்யாளர் முத்தைய வேளுக்குப் பொதுப்பார்வை உண்டென்று சொன்னாலும் அவர்களின் தனித்தமிழ்க் கண்ணோட்டம் தமிழ்த்துறையை ஆலமரமென வளர்த்தது எனலாம். தமிழ்த்துறைக்கென்று தனிக்கட்டிடம் ஒன்று கட்டப் பெறுதல் வேண்டும் என்ற நல்லெண்ணத்தால், நடைபெற்ற பொன்விழாவில் இணை வேந்தர் முத்தையவேள் அக்கட்டிடத்திற்குரிய கால்கோளினை நடத்தி வைத்தார்கள். அக் கட்டிடம் விரைவிலேயே எழுப்பப் படவிருக்கிறது ன்பது எண்ணி மகிழ்தற்குரியது,

தமிழ்த்துறையில் நாளும் நடக்கும் தமிழ்ப்பணிகளையும் தமிழ்த்துறை ஆசிரியர்களின் உழைப்பையும் முன்னேற்றத்தையும் கேட்டறிந்த அண்ணாமலை ஈன்ற முத்தாம் தமிழின் சொத்து மன்னர் முத்தையவேள் அவர்கள் தெய்வமாகி விட்டார்கள். அவர்தம் நினைவுநாளில் (21.5.1984) தமிழ்த் துறையினர் எடுத்துக்கொண்ட உறுதிமொழி.

“அமரர் அரசர் முத்தையவேள் நமக்கு என்றும் அருள்புரிய இறைஞ்சி, ஈடில்லா இணைவேந்தர் விழைந்த தமிழ்ப்பணிகளை அவர்தம் இன்னுயிர் மகிழ நிறைவேற்றுவோம்”.

தமிழ்த்துறைத் தலைவர்
ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள்
மாணவர்கள்



பாரி அச்சகம், சிதம்பரம். பிரதிகள்-1000.

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
மேனாள் துணைவேந்தர்
16, பாரதி தெரு.
திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை-600 096.

"தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த குறிக்கோளாக இருக்கும்"

— ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்
(முதல் ஆளவை மன்றத் தொடக்க உரை-1929)

"என் தந்தையார் தோற்றுவித்த பல்கலைக்கழகத்தை வளர்ப்பதும், தமிழுக்குத் தொண்டு செய்வதும், தமிழறிஞர்களைப் பாராட்டுவதும் என்வாழ்க்கையின் இலட்சியம்"

— இணைவேந்தர் அரசர் முத்தையவேள்
(நாவலர். சோமசுந்தர பாரதியாருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் வழங்கிய விழாவில்)